2. வினாக்கள்—விடைகள்

நட்சத்திரக் குறியிட்ட வினாக்கள்

Tourist Centres.

* 190 *Q*.—THIRU V. R. PERIANNAN & THIRU A. BALASUBRAMANIAM: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to make Kolli Hills of Salem district as Tourist Centre; and

(*b*) if so, the stage at which the matter now stands?

சுற்றுலா மையங்கள்

திரு. வி. ஆர். பெரியண்ணன் திரு. ஆ. பாலசுப்ரமணியம்: மாண்புமிகு செய்தி - சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையை, சுற்றுலா தளமாக (Tourist Centre) அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போழுது எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஆர், எம். வீரப்பன்: (அ) மற்றும் (இ) இந்த கொல்லி மலையை சுற்றுலா மையமாக மேம்படுத்தும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நிதிநிலையை ஒட்டி இத்திட்டத்தை செயலாற்றுவது பற்றி பரிசீலிக்கப்படும. என்றாலும், சமீபத்தில் தமிழ் நாட்டு சுற்றுலா வளமை குறித்து மத்திய அரசுக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் (Survey) ஆறாவது திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்பட்டுள்ள சுற்றுலா மையங்களில் கொல்லி மலையும் ஒன்றாகும்.

* 191 *Q*.—THIRU K. S. MANI: Will the Hon. the Minister for Information and Tourism be pleased to state—

(*a*) whether any new places have been selected to attract the tourists;

(*b*) if so, the names of those places;

(*c*) whether there is any proposal with the Government to attract tourists more and more; and

(*d*) if so, the details thereof ?